**நுவரெலியா பிரதேச சபை - 2024**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

நுவரெலியா பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய பொழிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் பாதகமான அபிப்பிராயத்திற்காக அடிப்படை பகுதியில் கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான முக்கியத்துவம் காரணமாக 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நுவரெலியா பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை வெளியிடப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கையின் 1.6.1 (அ) அவதானிப்பு தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளுராட்சி மன்றங்களை மேம்படுத்தல் துறை ரீதியான செயற் திட்டத்தின் கீழ் ரூபா 90,470,000 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டு 2024 மே 20 ஆம் திகதி சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த புறெகும கட்டிடத்தின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2025 இன் இறுதி கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதாக. | சபைக்கு சொந்தமான அனைத்து சொத்துக்களையும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டின் பொருள் ஏல விற்பனையில் அகற்றப்பட்டிருந்த ரூபா 149,000 ஆன 02 மோட்டார் சைக்கில்கள் மோட்டார் வண்டி மற்றும் வண்டில்கள் கணக்கில் தொடர்ந்தும் காண்பிக்கப்பட்டு இருந்தது. | .2025 இறுதி கணக்குகளை தயாரிக்கும் போது பதிவேடுகள் மற்றும் கணக்கிலிருந்து அகற்றுவதாக. | ஏல விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் கணக்கில் இருந்து அகற்றப்பட வேண்டும. |
| (இ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மொத்தம் ரூபா 170,750 ஆன அலுவலக உபகரணங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நடப்பாண்டின் போது குறைபாடுகள் சீராக்கம் செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதாக. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு வருமான செலவின கணக்கின் மிகை தொகை ரூபா 31,360,205 கணக்குகளில் இருந்து விடுபட்டிருந்த போதும் ஐந்தொகை சமப்படுத்தப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | முன்னைய ஆண்டுகளுக்கு உரியதாக மீலாய் வானில் இனங்காணப்பட்டு இருந்த ரூபா 48,513,172 கூட்டுத்தொகையான முத்திரை கட்டணங்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கையில் தவறுதலாக மீண்டும் திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | மீண்டும் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாவண்ணம் பார்த்துக் கொள்வதாக. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டுக்காக அட்டவணை மூலம் ஆண்டிற்கான முத்திரை கட்டண வருமான ஒன்று இளங்காணப்படாதிருந்த போதும் ரூபா 42,795,984 ஆன முத்திரை கட்டண வருமானம் ஒன்று தவறுதலாக ஆண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டில் சரியாக இனங் கண்டு கணக்கு தயாரிக்கப்படும் என்பதாக. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட 06 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் அவற்றிற்குரிய ஆரம்ப புத்தகங்கள் / உபயோக பயன்பாட்டு / ஆவணங்கள் மாதாந்த பொழிப்புகள் / பி.ச அறிக்கை மீதிகளுடன் ஒப்புடும் போது ரூபா 13,096,786ஆன இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. | 2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கைத் தயாரிக்கும் போது திருத்தம் செய்யப்படுமென. | கணக்கு மீதிகளுக்குரிய அட்டவணை களுடன் ஒப்பீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்காக தேவையான எழுத்துமூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படும் மொத்தம் ரூபா 1,372,189 ஆன நிர்மாண கடன்பட்டோருக்குரிய நிர்மாண கோவைகள் சமர்ப்பிக்கப்படாமல் காரணமாக கணக்காயின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாத இருந்தது. | கடிதக் கோவைகளை கண்டுபிடிப்பதற்கு முடியாதிருந்ததுடன் மீண்டும் பரீட்சித்து எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்வதாக. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு பதிவேடுகள் மற்றும் கோவைகள் பேணி செல்லப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமைகள

#### சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ) பாராளுமன்ற சட்டங்கள்** | | | |
| 2021 ஜுலை 08 ஆந் திகதிய 2235/54 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோஷலிசக் | சபையால் அதிகாரப் பிரதேசத்தில் 2018 – 2022 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் | இணக்கச் சான்றிதழ்களை வழங்குவதற்கும் தண்டப்பணத்தை | குடியிருப்பிற்காக பயன்படுத்துகின்ற கட்டிடங்களுக்காக இணக்கச் |

| | | | |
|---|---|---|---|
| குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 08 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அந்தச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் திருத்தப்பட்ட திட்டமிடல் மற்றும் கட்டிட கட்டளை / பிரமாணங் களின் VI ஆம் பகுதியின் 83.1 ஆம் பிரிவு | அங்கீகரிக்கப்பட்ட 79 கட்டிட திட்டமிடல் விண்ணப்பங்களுக்கு இணக்கச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ள தாக. | சான்றிதழ்களை வழங்க வேண்டும். |
| (ஆ) **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்**<br>நி.பி. 571(3) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு 2020 – 2022 காலப் பகுதிக்குரிய மொத்தம் ரூபா 6,400,284 காலாவதியான 23 வைப்புக்கள் தீர்வு செய்யப்படவில்லை. | 23 வைப்புக்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு சீராக்கம் செய்வதாக. | .காலாவதியான வைப்புக்களை தீர்வு செய்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 38,134,397 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 24,001,479 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2024 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2024 பட்டியலிடப்ப ட்ட வருமானம் | 2024 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2023 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2023 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2023 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 10,000,000 | 7,458,971 | 6,714,814 | 3,381,698 | 7,000,000 | 6,141,853 | 5,445,139 | 2,637,541 |
| (ii) | வாடகை | 13,734,650 | 12,594,845 | 13,146,860 | 692,024 | 11,191,931 | 7,195,579 | 6,971,707 | 1,244,039 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 11,925,000 | 8,836,569 | 8,836,569 | - | 6,125,000 | 9,446,332 | 9,446,332 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 37,145,000 | 68,856,881 | 69,730,065 | 33,403,225 | 24,864,750 | 34,468,867 | 7,370,485 | 33,840,110 |
| | | 72,804,650 | 97,747,266 | 98,428,308 | 37,476,947 | 49,181,681 | 57,252,631 | 29,233,663 | 37,721,690 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 3,338,486 ஆக இருந்தது அதில் ஒரு அலகு நிலுவை ரூபா 50,000 இற்கும் 100,000 இற்கும் இடைப்பட்ட 04 அலகுகளில் இருந்து ரூபா 232,465 தொகையும் ஒரு அலகின் நிலுவை ரூபா 25,000 முதல் ரூபா 50,000 இடையே 11 அலகுகளிலும் இருந்து ரூபா 388,954 தொகையும் ஓர் அலகு நிலுவை ரூபா 25,000 இற்கு குறைந்த 1272 அலகுகளிலிருந்து ரூபா 2,718,371 தொகை என்பவற்றை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவிடப்பட்டு இருக்கவில்லை. | நிலுவை வருமானம் எதிர்காலத்தில் அறவிடப்படும் என்பதாக. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிலுவை வருமானம் விரைவில் அறுவிடப்பட வேண்டும். |
| **(ஆ) கடை வாடகை** | | |
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் காணப்பட்ட ரூபா 600,004 ஆன மொத்த கடை வாடகை நிறுவையில் 05 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்படும் ரூபா 148,481 ஆன மீதி ஒன்றும் இருந்தது. | எஞ்சிய நிலுவை மீறி தொடர்பாக வழக்கு நடவடிக்கைகள் மூலம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| **(இ) ஏனைய வருமானம்** | | |
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய மொத்த நீர் கட்டண நிலுவை ரூபா .616,169 ஆக இருந்தது அதில் 2 - 3 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் இருந்து நிலுவையாக | நடப்பாண்டில் நிகழ்ச்சித்திட்டமொன்றை செயற்படுத்தி அறவிடுவதாக. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| காணப்படும் ரூபா 65,325 தொகை 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்பட்ட ரூபா 138,537 ஆன மீதியும் இருந்தது. | | |

**(ஈ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 159,995 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 32,190,762 ஆக இருந்தது. | அறவிடுவதற்கு தேவையான அட்டவணைகள் தலைமைச் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பெறுகை செயற்பாட்டிற்கு புறம்பாக ஆதனங்களை குத்தகைக்கு வழங்குதல் மற்றும் தீர்வு செய்யப்படாத முற்பணம் தொடர்பாக இனங்காணப்பட்டிருந்த மொத்தம் ரூபா . 1,979,736 ஆன நட்டம் ஒன்று தொடர்பாக நிதிப் பிரமாணம் 104(4) பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு பொறுப்பான தரப்பினர் இனங்காணப்பட்டு 2022 ஜூன் மற்றும் 2023 மார்ச் காலப் பகுதியில் குறித்த பரிந்துரை வழங்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டு இறுதித் திகதி வரையிலும் குறித்த பரிந்துரை செயல்படுத்தப்பட்டு நட்டத்தை அறவிடுவதற்கு அல்லது சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி மன்ற திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டு தேவையான ஆலோசனைகள் கோரப்பட்டுள்ளதாக. | நி.பி 104(4) பரிந்துரை செயற்படுத்தப்பட்டு நட்டம் அறவிடப்பட வேண்டும். |

### 3.2 வெளிப்படையான முறைகேடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான கெப்வண்டி ஒன்று 2024 ஆகஸ்ட் முதல் செப்டம்பர் வரை 42 நாட்களில் 862 லீட்டர் எரிபொருளுக்காக ரூபா 267,220 தொகை செலவிடப்பட்டு 6895 கிலோமீட்டர் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதும் வாகனத்தை பயன்படுத்திய உத்தியோகத்தர் கையொப்பமிட்டு | 42 நாட்கள் கால பகுதிக்காக உரிய ஓட்ட குறிப்புகள் கையொப்பமிடப்படாமல் இருந்ததை ஏற்றுக் கொள்வதுடன் வாகனத்தின் ஓட்ட குறிப்புகளை | வாகனங்களை பயன்படுத்தியமைக் காக கையொப்ப மிடாமை மற்றும் கடமைப்பாடு ஒன்று இல்லாமல் வாகனங்கள் மற்றும் எரிபொருள் |

| | | |
|---|---|---|
| இருக்கவில்லை. அவ்வாறே 15 நாட்களில் 262 லீட்டர் எரிபொருளுக்காக ரூபா 81,220 தொகை செலவிடப்பட்டு 2096 கிலோமீட்டர் வாகனத்தை ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டு எரிபொருள் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. | கணக்காய்க்கு சமர்ப்பிக்கப்பட்டதாக. | முறையற்ற பாவனை தொடர்பாக உரிய பரிசோதனைகளை மேற்கொண்டு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு உரிய அரசின் உத்தியோகபூர்வ இல்லமொன்று மாதாந்தம் ரூபா 250 வீதம் கொடுப்பனவு உடன்படிக்கை ஒன்று இல்லாமல் வெளிதரப்பினருக்கு குடியிருப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்ததுடன் 02 வீடுகள் வாடகை கொடுப்பனவு ஒன்று இல்லாமல் செயலாளருக்கும் 2022 ஆம் ஆண்டில் சபையில் சேவை புரிந்து ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் ஒருவருக்கும் முறையற்ற வகையில் குடியிருப்புக்காக இடமளிக்கப்பட்டு இருந்தது. | குத்தகை வாடகை காரருக்கு தெரியப்படுத்தி நிலுவைத் தொகையை அறவிடுவதற்கும் சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவைத் தொகையை அறவிட்டு உத்தியோகபூர்வ இல்லம் தொடர்பாக தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் உத்தியோகபூர்வ இல்லத்தை பயன்படுத்துகின்ற பயன்படுத்தியிருந்த 03 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 92,769 ஆன உத்தியோகபூர்வ இல்ல வாடகை 06 மாதங்கள் முதல் 25 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை தொகையை அறவிடுவதற்கும் வழக்கு தொடர்வதற்கும் எதிர்வரும் நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவைத் தொகையை அறவிட்டு உத்தியோகபூர்வ இல்லம் தொடர்பாக தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் 2023 மே மாதத்தில் அதிகார பிரதேசத்தில் செயற்படுத்தப்பட்ட நானுஓயா மாடுகள் கொலைகளம் பௌதிக ரீதியாக பரீட்சைக்குப்பட்டு சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டு இறுதிவரையிலும் குறித்த பரிந்துரைகள் செயற்படுத்தப்படாமல் மாடுகள் கொல்லுமிடம் நடத்திச் செல்லப்பட்டு இருந்தது. | இது தொடர்பாக முன்னுரிமையாக கவனம் செலுத்தி தேவையான எதிர்வரும் நடவடிக்கைகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | பரிந்துரைகளை செயற்படுத்தாமை காரணமாக சட்ட நடைமுறைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நானுஓயா குறுக்கு வீதிக்கு அண்மையில் அமைந்துள்ள தலைமை அலுவலகம் மற்றும் கடைகள் அளவிடுவதற்காக ரூபா 165,460 தொகை 2023 ஆம் ஆண்டில் நில அளவை திணைக்களத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அளவீட்டு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சான்றிதழ்களை விரைவில் பெற்றுக்கொள்ள் நடவடிக்கை எடுப்பதாக. | அளவீட்டு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டில் சபையினால் ரூபா 1,373,687 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டு இருந்த கொளன்கொடியாவத்தயில் உள்ள 9 கடைகள், ரூபா 6,009,602 ஆன ட்ரக் வண்டி ஒன்று மற்றும் சபைக்கு சொந்தமான உத்தியோகபூர்ல இல்லமொன்று 01 ஆண்டு முதல் 06 ஆண்டுகள் காலப்பகுதியில் பயன்படுத்தப்படாமல் விளைவற்றும் குறை பயன்பாட்டுடனும் காணப்பட்டன. | சபைக்கு சொந்தமான டிரக் வண்டி எதிர்காலத்தில் நவீனமயப்படுத்தப்பட்டு சேவையில் ஈடுபடுத்துவதாக. | கடைகள் மற்றும் வாகனங்களை செயற்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும. |

### 3.6 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வண்டின் இறுதி திகதியில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி உள்ளவரான பதவியணியுடன் ஒப்பிடும்போது 18 பதவிகளில் 30 வெற்றிடங்கள் காணப்பட்டன இந்நிலைமை பொது பயன்பாட்டு சேவைகள் செயற்திறனான நடாத்திச் செல்வதற்கு பாரிய தடையொன்றை ஏற்படுத்தியிருந்தது. | ஆட்சேர்ப்பதற்காக தேவையான தகவல்களை அதிகாரிகளுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாக. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சபையில் சேவை புரிந்து சேவை இடைநிறுத்தப்பட்ட ஒரு உத்தியோகத்திடம் இருந்து அளவிடப்பட வேண்டிய ரூபா 237,167 ஆன கடன் மீதி ஒன்று 04 ஆண்டுகள் காலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிலுவை ஊழியர் கடன் அறவிடப்படும் என்பதாக. | நிலுவை ஊழியர் கடன் அறவிடப்பட வேண்டும். |